தமிழ்நாடு அரசு

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

கடிதம் (நிலை) எண்.183, நாள்: 21.7.97.

----

அய்யா/அம்மையீர்,

பொருள்: குடியிருப்பு – மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலர் – குடியிருப்பு – வாடகைக் குடியிருப்பை சொந்தமாக்கிட கேட்டு வரும் கருத்துரு – அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை: அரசாணை (நிலை) எண்.730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் ......76. 14.4.76.

----

பார்வையில் காணும் அரசாணையில், அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு அரசால் தடையாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணியிலிருக்கும் ஊழியர்களுக்காகக் கட்டப்பட்ட குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ( ) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் குடியிருந்து வரும் ஊழியர்கள் அக்குடியிருப்புகளை தங்களுக்குச் சொந்தமாக்கிட கேட்டு வரப்பெற்ற விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு அவர்களுக்குச் சொந்தமாக்கிட மாநகராட்சி மற்றும் நகராட்சி மன்றங்களில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள தடையாணைக்கு விலக்களித்து அரசால் அனுமதியளிக்கப்பட்டு, அந்த ஊழியர்களுக்கு கிரைய அடிப்படையில் ( ) விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் குடியிருப்புகள் பற்றாக்குறை ஏற்பட்டு பிற மாநகராட்சி மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு ஊழியர் குடியிருப்புகளில் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யமுடியாத நிலை ஏற்படுகிறது. இதனை கருத்திற்கொண்டு, இனி வருங்காலங்களில் இந்நிலை ஏற்படுவதை தவிர்க்க அரசு நன்கு ஆய்வு செய்தது.

3. ஆய்வுக்குப்பின், நகராட்சி நிர்வாக இயக்குநர், அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள், இனி வருங்காலங்களில் மாநகராட்சி மற்றும் நகராட்சி ஊழியர் குடியிருப்புகளை பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் ( ) மட்டுமே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் அவ்வாறு ஒதுக்கீடு பெற்று அதில் குடியிருந்து வரும் ஊழியர்கள் பிற்காலத்தில் அதனை தமக்குச் சொந்தமாக்கிட கேட்டு விண்ணப்பித்தாலோ அல்லது ஊழியர்கள் அல்லாத பிற நபர்கள் குடியிருப்புகளை சொந்தமாக்கிட கேட்டு விண்ணப்பித்தாலோ அதனை ஏற்குவித்து மாமன்றத்தின் முன் வைத்து தீர்மானம் இயற்றி அரசின் அனுமதிக்காக கருத்துரு எதுவும் அரசுக்கு அனுப்பக்கூடாது என்று அறிவுரை வழங்கவும், இவ்வறிவுரையை

-2-

கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கவும் பணிக்கப்பட்டுள்ளேன்.

3. இக்கடிதத்தினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதலையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

ஒம்/- . . . . . . . . .

அரசு செயலாளருக்காக.

//உண்மை நகல்//

கண்காணிப்பாளர்.